**செ. கு. எண்:019** **நாள் :29.04.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ பன்னீர்செல்வம் அவர்களின்

அறிக்கை – 29.4.2015

திருவண்ணாமலை மாவட்டம், தென்மாத்தூர் கிராமம் அருகே இன்று (29.4.2015) காலை மதுரையிலிருந்து திருவண்ணாமலை சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் தென்மாத்தூர் கிராமத்தை சேர்ந்த திரு.சீமான், த/பெ.அயோத்தி, திரு.ஏழுமலை, த/பெ.முனுசாமி, திரு.ராமலிங்கம், த/பெ சுப்பிரமணி ஆகிய மூவர் சம்பவ இடத்திலேயும், திரு.அருணாசலம் த/பெ.முனுசாமி, மற்றும் திரு.ரங்கன் த/பெ.பாண்டு ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலும் மரணம் அடைந்து விட்டனர் என்ற செய்தியை அறிந்து மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு சீமான், திரு ஏழுமலை, திரு.ராமலிங்கம், திரு.அருணாசலம் மற்றும் திரு.ரங்கன் ஆகியோர் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் தென்மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.சுப்பிரமணி த/பெ. ரேணு, திரு.முனுசாமி த/பெ. கூத்தான் மற்றும் திரு.காணல் (எ) கோவிந்தன் த/பெ. லட்சுமணன் ஆகிய மூவரும் பலத்த காயமடைந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்திட மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகத்திற்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த துயரச் சம்பவம் குறித்த தகவல் கிடைத்தவுடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும், காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனைகளில் நல்ல முறையில் சிகிச்சை அளித்திடவும் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் முக்கூர் திரு.N. சுப்பிரமணியன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

**ஓ பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**